# 5 மாநில சட்டமன்றத் தேர்தல் நிறைவடைந்த நிலையில் பெட்ரோல், டீசல் விலை உயருகிறது!

## ஒன்றிய பா.ஜ.க. அரசு ஒப்புதல் – எண்ணெய் நிறுவனங்கள் கூட்டமைப்பு முடிவு!

புதுடெல்லி, மே 12-

ஐந்து மாநில சட்டமன்ற தேர்தல் முடிவடைந்த நிலையில் பெட்ரோல், டீசல் விலையை ரூ.5 வரை உயர்த்த எண்ணெய் நிறுவனங்களின் கூட்டமைப்பு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஈரான் மீது இஸ்ரேல், அமெரிக்க கூட்டுப்படைகள் போர் காரணமாக கச்சா எண்ணெய் விலையும் பீப்பாய் 65 டாலரில் இருந்து 100 டாலருக்கு மேல் சென்றுவிட்டது. இதனால், இந்திய எண்ணெய் நிறுவனங்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இந்த நஷ்டத்தை ஈடுகட்ட பெட்ரோல், டீசல், காஸ் சிலிண்டர் உள்ளிட்ட அனைத்து எரிபொருட்களின் விலையையும் உயர்த்த வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளன.

ஆனால், தமிழ்நாடு, புதுச்சேரி, மேற்குவங்கம், கேரளா, அசாம் ஆகிய 5 மாநிலங்களில் சட்டமன்ற தேர்தல் நடந்ததால், பெட்ரோல், டீசல், காஸ் சிலிண்டர் உள்ளிட்ட எரி பொருட்களின் விலையை உயர்த்தாமல் ஒன்றிய பா.ஜ. அரசு பார்த்துக் கொண்டது. தற்போது தேர்தல் முடிந்து, அனைத்து நடைமுறைகளும் திரும்ப பெறப்பட்டுள்ள நிலையில், எரிபொருட்கள் விலை உயர்வை மேற்கொள்ள எண்ணெய் நிறுவனங்களின் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

கடந்த மே 1ம் தேதி, 19 கிலோ வர்த்தக காஸ் சிலிண்டர் விலையை ரூ.998 உயர்த்தினர். இதன்மூலம் நாடு முழுவதும் வர்த்தக சிலிண்டர் சுமார் ரூ.3 ஆயிரத்திற்கு விற்கப்படுகிறது. அன்றைய தினத்தில், 5 கிலோ சிறிய சிலிண்டர் மற்றும் விமான எரிபொருளான ஒயிட் பெட்ரோல், தொழிற்சாலைகளுக்கான டீசல் ஆகியவற்றின் விலையையும் எண்ணெய் நிறுவனங்கள் உயர்த்தின. வீட்டு உபயோக சமையல் காஸ் சிலிண்டர், பெட்ரோல், டீசல் விலையை மட்டும் உயர்த்தாமல் நிலையாக வைத்துக் கொண்டனர்.

இந்நிலையில் தற்போது, 5 மாநிலங்களிலும் தேர்தல் முடிந்து, புதிய அரசுகள் பொறுப்பேற்க இருக்கும் நிலையில், இதற்கு மேல் தங்களால் பெட்ரோல், டீசல் உள்ளிட்ட எரிபொருட்களின் விலையை உயர்த்தாமல் இருக்க முடியாது என ஒன்றிய அரசுக்கு எண்ணெய் நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மாதத்திற்கு ரூ.30 ஆயிரம் கோடி நஷ்டத்தை சந்தித்து வருவதால், வரும் 15ம் தேதிக்குள் பெட்ரோல், டீசல் விலையை உயர்த்த வேண்டும் என கருத்து தெரிவித்துள்ளனர்.

எண்ணெய் நிறு வனங்கள் சந்தித்துள்ள நஷ்டத்தை ஈடுகட்ட பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் விலை லிட்டருக்கு ரூ.4 முதல் ரூ.5 வரை உயர்த்தப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளது. அதுவும் வரும் 15ம் தேதி இவ்விலையேற்றம் நடைமுறைக்கு வர வாய்ப்புள்ளது எனக் கூறப்படுகிறது. அதே போல், வீட்டு உபயோக காஸ் சிலிண்டர் விலையை ரூ.50 முதல் ரூ.100 வரை உயர்த்தவும் திட்டம் வைத்துள்ளனர்.

அதற்கு ஒன்றிய அரசிடம் இருந்து தற்சமயம் ஒப்புதல் கிடைப்பதில் சிக்கல் இருப்பதாக கூறப்படுவதால், முதலில் பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தி விட்டு, பிறகு காஸ் சிலிண்டர் விலையை உயர்த்தலாம் என்ற முடிவுக்கு எண்ணெய் நிறுவனங்களின் கூட்டமைப்பு வந்துள்ளது எனத்தகவல்கள் வெளியாகியுள்ளது.

### வேலூர் தொகுதி 32வது வட்டத்தில்

# தி.மு.க. சார்பில் நன்றி அறிவிப்புக் கூட்டம்!

## ப.கார்த்திகேயன் நன்றியுரையாற்றினார்!

வேலூர், மே 12-

வேலூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்ட ப.கார்த்திகேயன் 32வது வட்டம் திமுக சார்பில் நன்றி தெரிவிப்பு கூட்டம் நடந்தது.

கூட்டத்திற்கு வட்ட செயலாளர் ஆனந்தகுமார் தலைமை தாங்கினார். அவைத் தலைவர் முகமது சகி, மேயர் சுஜாதா, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் திமுக வேட்பாளராக போட்டியிட்ட ப.கார்த்திகேயன் கலந்து கொண்டு வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து பேசியதாவது:



என்னை பொறுத்தவரை ஒரு சட்டமன்ற உறுப்பினராக, நகரமன்ற தலைவராக, மாநகராட்சி மேயராக பொறுப்புடன் செயல்பட்டேன். இந்த வார்டை பொறுத்தவரை அதிகமாக திமுகவுக்கு வாக்களித்த மக்கள் உள்ளனர். அதனால் தான் இங்கே நன்றி சொல்ல நாங்கள் வந்திருக்கிறோம். திமுக தான் ஏழைகளுக்காக தோன்றிய இயக்கம்.

மக்களுக்காக பல திட்டங்களை கொண்டு வந்த இயக் கம். ஒரு சாதாரண பீடி தொழிலாளி குடும்பத்தை சேர்ந்தவர்கள் அதிகாரிக ளாக்கிய இயக்கம், தமிழ கத்தை எல்லா நிலையி லும் உயர்த்தி காட்டியவர் மு.க.ஸ்டாலின்

கொரோனா காலத் தில் மக்களுக்கு உதவியவர் அவர். நானும் என் மக்களுக்கு செய்ய வேண்டும் என்றஉணர்வால் தான் உதவிகள் செய்திருக்கிறேன். வாக்களித்த உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும் என்ற உணர்வோடு தான் இங்கே வந்திருக்கிறேன். நான் சட்டமன்ற உறுப் பினராக இருந்தபோது

ஒரு தவறான வார்த்தை கூட யாரை பார்த்தும் பேசியது இல்லை. என் மக்களுக்கு செய்யுங்கள் என்று தான் அதிகாரிகளிடத்தில் பேசியிருக்கிறேன். வேலூர் தொகுதிக்கு எண்ணற்ற திட்டங்களை கொண்டு வந்துள்ளேன். பொறுப்போடு இருந்து நான் செயலாற்றி இருக்கிறேன். இந்த சமூகத்துக்காக உழைத்த இயக்கம், உழைத்துக் கொண்டே இருக்கும் இயக்கம். என்றென்றும் அழிந்து விடாது. இந்த மக்களுக்கு என்றும் உறுதுணையாக இருப்போம். வேலூர் தொகுதிக்கு தொண்டனாக இருந்து உங்களுக்கு அயராது உழைப்பேன். இவ்வாறு அவர் பேசினார்.

இதில் பகுதி செயலாளர்கள் முருகபெருமாள், சுந்த ரவிஜி, மண்டல குழு தலைவர் நரேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### டச்சு சொகுசு கப்பலில்

# ஹாண்டா வைரஸ் தாக்கம்!

ஸ்பெயின், மே 12-

ஹாண்டா வைரஸ் தாக்கம் ஏற்பட்டுள்ள டச்சு சொகுசு கப்பலில் இருந்து தங்கள் நாட்டு பயணிகளை மீட்க ஐரோப்பிய நாடுகள் மும்முரம் காட்டி வருகின்றன.

ஸ்பெயினின் கனேரி தீவுகளை நோக்கி நெதர்லாந்துக்கு சொந்தமான சொகுசு கப்பல் ஒன்று சென்று கொண்டிருகிறது. இக்கப்பலில் உள்ளவர்களில் 8 பேருக்கு ஹண்டா வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. கப்பலிலேயே 3 பேர் உயிரிழந்த இந்த வைரஸ் பாதிப்பால் உயிரிழந்துள்ளனர். இந்த வைரஸ் காரணமாக உயிரிழப்பு ஏற்படுவது குறைவு என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்திருந்தாலும், கப்பலிலேயே 3 பேர் உயிரிழந்திருப்பது மக்களை அச்சமடைய வைத்துள்ளது. இந்நிலையில், கனேரி தீவை கப்பல் அடைந்த உடன், அக்கப்பலில் உள்ள தங்கள் நாட்டு பயணிகளை மீட்க ஐரோப்பிய நாடுகள் மும்முரம் காட்டி வருகின்றன. ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், அயர்லாந்து மற்றும் நெதர்லாந்து நாடுகள் தனிப்பட்ட விமானங்களை அனுப்ப முடிவு செய்துள்ளன.

அதன் பின்னர் அவர்களை தனிமைப்படுத்தி தொற்று உள்ளதா என்று ஆய்வு செய்து மருத்துவ கண்காணிப்பில் வைக்க திட்டமிட்டுள்ளன. இதனால், ஐரோப்பாவில் ஹண்டா வைரஸ் அச்சம் அதிகரித்துள்ளது.

### வவ்வால்களிடம் புதிய கொரோனா:

# தாய்லாந்து விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு!

புதுடெல்லி, மே 12 -

வவ்வால்களிடம் புதிய வகை கொரோனா வைரஸை தாய்லாந்து விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இதுகுறித்து, ‘செல்’ என்ற மருத்துவ இதழில் வெளியான கட்டுரையில் கூறியிருப்பதாவது:

தாய்லாந்தில் உள்ள வவ்வால்களிடம் கண்டறியப்பட்டுள்ள புதிய வைரஸ், மனிதர்களைத் தொற்றும் ஆற்றலைக் கொண்டிருக்கலாம். இந்த வைரஸ் மக்களிடையே பரவி வருவதற்கான ஆதாரம் இல்லை. ஆனாலும், விலங்குகளிடம் பரவும் வைரஸ்களை கண்காணிப்பது முக்கியம்.

இந்த ஆய்வில், வைரஸ் ஏசிஇ2 என்ற மனித உயிரணு புரதங்களுடன் இணையக் கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கவனித்துள்ளனர்.

இதன் பொருள் ஒரு பெருந்தொற்று உடனடியாக ஏற்படும் என்பதல்ல, மாறாக இது விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்குப் பரவக்கூடிய வாய்ப்பு இருப்பதைக் காட்டுகிறது. இவ்வாறு கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

# பஞ்சாப் தொழில் துறை அமைச்சரை கைது செய்த அமலாக்கத்துறை!

அமிர்தசரஸ், மே 12-

பணமோசடி வழக்கில் பஞ்சாப் தொழில் துறை அமைச்சரை அமலாக்கத் துறை கைது செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பஞ்சாப் ஆம் ஆத்மி அரசின் தொழில் துறை அமைச்சர் சஞ்சீவ் அரோரா உள்ளார். புதிதாக பதிவு செய்யப்பட்ட பண மோசடி விசாரணையின் ஒரு பகுதியாக பஞ்சாப் அமைச்சர் அரோரா மற்றும் அவருடன் தொடர்புடையவர்கள் என கருதப்படும் நபர்களின் வீடுகள், அலுவலகங்களில் அமலாக்கத் துறை சோதனை நடத்தியது. சண்டிகரில் உள்ள சஞ்சீவ் அரோராவின் இல்லத்திலும் சோதனைகள் நடந்தன. அதே போல் டெல்லி, குருகிராம் அலுவலகங்களில் சோதனைகள் நடந்தன. சஞ்சீவ் அரோரா தனது நிறுவனத்தின் மூலம் டெல்லியை தளமாக கொண்ட செயல்படாத போலியான நிறு வனங்களிடம் இருந்து 100 கோடிக்கும் அதிக மதிப்புள்ள செல்போன்களுக்கு மோசடியான கொள்முதல் ரசீதுகளை உருவாக்கியதாக கூறப்படுகிறது. மேலும் சண்டிகரில் உள்ள சஞ்சீவ் அரோராவின் அதிகாரப்பூர்வ இல்லத்தில் அமலாக்கத்துறை அதிகாரிகள் நடத்திய சோதனைகளைத் தொடர்ந்து, அவர் பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். இந்த கைது பஞ்சாப் அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# அனில் அம்பானிக்கு சொந்தமான நிறுவனங்களில் சோதனை!

மும்பை, மே 12-

அனில் அம்பானி தலைமையிலான ரிலையன்ஸ் ஏடிஏ குழும நிறுவனங்களான ரிலையன்ஸ் டெலிகாம் லிமிடெட், ரிலையன்ஸ் கமர்ஷியல் பைனான்ஸ் லிமிடெட், ரிலையன்ஸ் ஹோம் பைனான்ஸ் லிமிடெட் மற்றும் அவற்றின் இயக்குனர்களுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட மூன்று வழக்குகள் தொடர்பாக, மும்பையில் உள்ள 17 வளாகங்களில் சி.பி.ஐ. சோதனை நடத்தியது.

இது தொடர்பாக சிபிஐ வெளியிட்டுள்ள அறிக்கையில், அனில் அம்பானியின் ரிலையன்ஸ் ஏடிஏ குழும நிறுவனங்களின் இயக்குனர்களின் குடியிருப்பு வளாகங்களிலும், வங்கி நிதியைத் திசைதிருப்புவதற்காகக் கணக்குகள் பயன்படுத்தப்பட்ட இடைத்தரகு நிறுவனங்களின் அலுவலகத்திலும் சோதனைகள் நடத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளன.

மும்பை சிபிஐ சிறப்பு நீதிபதியால் 8 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட தேடுதல் ஆணைகளின் அடிப்படையில் சோதனைகள் நடத்தப்பட்டு, குற்றத்தை நிரூபிப்பதற்கான ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், ஒரே முகவரியிலிருந்து பல இடைத்தரகு நிறுவனங்கள் செயல்பட்டு வந்ததும் சோதனைகளில் தெரியவந்துள்ளதால் விசாரணை தொடர்வதாக சி.பி.ஐ. அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தெலுங்கானாவில் 17 வயது மாணவிக்கு பாலியல் துன்புறுத்தல்!

## ஒன்றிய இணை அமைச்சர் மகன் மீது போக்சோ வழக்கு!

ஐதராபாத், மே 11-

17 வயது மாணவிக்கு பாலியல் தொல்லை அளித்த புகாரில் ஒன்றிய இணை அமைச்சர் பண்டி சஞ்சய் குமாரின் மகன் மீது போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்தனர்.

தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தை சேர்ந்தவர் ஒன்றிய உள்துறை இணையமைச்சர் பண்டி சஞ்சய் குமார். இவரது மகன் பண்டி பகீரத். இவர் கடந்த டிசம்பர் மாதம் 31ஆம் தேதி அன்று 17 வயது மாணவியை, தனது தோட்டத்து இல்லத்தில் வைத்து பாலியல் தொல்லை அளித்ததாக கூறப்படுகிறது. இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மாணவி யின் தாயார், ஐதராபாத் காவல்துறையினரிடம் புகார் அளித்தார்.

புகாரில் மாணவியுடன் உறவில் இருந்த ஒன்றிய அமைச்சர் சஞ்சய்குமாரின் மகன் பகீரத், அவரை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியதாக குற்றம்சாட்டியுள்ளார். புகாரின் அடிப்படையில் போலீசார் ஒன்றிய இணை அமைச்சர் மகன் பண்டி பகீரத் மீது போக்சோ வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.



தென்காசி தெற்கு மாவட்டம் கீழப்பாவூர் ஒன்றியம் கல்லூரணி ஊராட்சி பாவூர்சத்திரத்தில் கல்லூரணி ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார் ஏற்பாட்டில் நீர் மோர் பந்தல் துவக்க விழா நிகழ்வு தொழிலதிபர் காளிதாஸ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் பங்கேற்று பொதுமக்களுக்கு நீர்மோர்,தர்பூசணி மற்றும் பழங்களை வழங்கினார். நிகழ்வில் தொழிலதிபர் சேவியர் ராஜன்,ஏ.பி.அருள்,இளங்கோ, சாக்கிரட்டீஸ்,காலச்சாமி,மேகநாதன், வின்சென்ட்,தங்கசெல்வம்,தீபன் சக்கரவர்த்தி உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

### ராஜ்குமார் ஏற்பாடு! ஆர்.கே.காளிதாஸ் தலைமை!

# கீழப்பாவூர் ஒன்றியத்தில் தண்ணீர் பந்தல் திறப்பு!

## பொ.சிவபத்மநாதன் பங்கேற்பு!

தென்காசி.மே.12-

தென்காசி தெற்கு மாவட்டம் கீழப்பாவூர் ஒன்றியம் கல்லூரணி ஊராட்சி பாவூர்சத்திரத்தில் கல்லூரணி ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார் ஏற்பாட்டில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா நிகழ்வு தொழில் அதிபர் ஆர்.கே.காளிதாஸ் தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் பங்கேற்று நீர்மோர் மற்றும் தர்பூசணி,பழங்கள் போன்றவற்றை பொதுமக்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்வு தொழிலதிபர் சேவியர் ராஜன்,பொதுக் குழு உறுப்பினர் ஏ.பி. அருள் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அருணோதயம், குலசேகரபட்டி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் இளங்கோ, மாவட்ட கவுன்சிலர் சாக்ரடீஸ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார் வரவேற்றார். தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் பொதுமக்களுக்கு பழம் மற்றும் நீர் மோர் வழங்கி தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அறங்காவலர் காலசாமி முன்னாள் மாவட்ட பொறுப்பு குழு உறுப்பினர் மேகநாதன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வின்சென்ட், ஒன்றிய கவுன்சிலர் சங்கர்,அட்மா சேர்மன் குணசீலன்,ஆலங்குளம் பேரூராட்சி முன்னாள் துணை சேர்மன் தங்க செல்வம்,மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் தீபன் சக்கரவர்த்தி,

மாவட்ட பிரதிநிதிகள் சமுத்திர பாண்டியன்,வளர் மதி ராஜன்,அன்பழகன், துரைப்பாண்டியன், ஸ்டீபன் சத்யராஜ், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் சுப்பிரமணியன்,கிளைக் கழக நிர்வாகிகள் வைத்திலிங்க ராஜா பொட்டுத்தாய், சிவன் பாண்டியன்,ரூபன் கண்ணன்,முத்துப்பாண்டி, பீமன்,சிவசக்தி அருணாசலம் ,இளைஞரணி துணை அமைப்பாளர் ஹரி கிருஷ்ணன்,ஒயிட் ராஜா,பெரியார் திலீபன், அருள் ஜூலியஸ்,ஒன்றிய பிரிதிநிதி சேர்மலிங்கம், அருள்பாண்டியன்,வி.எ. நகர் கணேசன்,சண்முக சுந்தர்ராஜ், சேகர்,பொன் செல்வம் ,தாசன்,கதிரேசன் தினகரன் ,சுபாஷ்,கழக வழக்கறிஞர் ஹரிகிருஷ்ணன்,குரும்பை சமுத்திர பாண்டி ஆனந்த், ஆல்வின், வினோத் ஆசீர்,தமிழ்ச்செல்வன்,பால் கனி, பரமசிவம்,ஆனந்த ராஜ், காந்தி ராமன், தனக்கு மார், பாண்டி ஆசாரி,துரை பாண்டியன்,வினைதீர்த் தான் ராஜேந்திரன் மற்றும் 100 க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.நிறைவில் ஒயிட் ராஜா நன்றி கூறினார்.

# உயிர்ப்புள்ள ஒரே இயக்கம்!



விழாக்கோலம் கொண்ட
கொளத்தூரில் கண்ணீர்
தேங்கி நின்றது!

நன்றிப் பெருக்கோடு
வந்த தலைவருக்கு
மக்களின் கண்ணீர்ப் பெருக்கு!

கலக்கம் ஏதுமில்லை
கழகமே உயிர் மூச்சென்று
உற்சாகம் தந்த
பிராணவாயு நம் தலைவர்!

இலக்கை அடைந்து
தமிழ்நாட்டை முன்னணிக்கு
கொண்டு வந்த தலைவருக்கு
இலங்கை நாடாளுமன்றத்தில்
பாராட்டு!

நலத்திட்டங்கள் தந்து
மேம்படுத்தியவருக்கு
தோல்வியைப் பரிசளித்தார்கள்!

முடங்கவில்லை தலைவர்
முடுக்கி விட்டார் மனதை
முன்னைவிட வேகமாக....

அனுபவப் புதையல்
கொண்டவர்
அடுத்த சரித்திரம்
படைக்கத் தயாராகிறார்...

எதிர்க்கட்சியாக
இருக்கும் போது தான்
கழகத்தின் எதிர்ப்பு சக்தி
கணிசமாக உயரும்....

தலைவரின் பண்புகண்டு
பலரும் நெகிழ்கிறார்..
எதிர் முகாம் கூட
இன்முகம் காட்டுகிறது....

இளம் தலைவர்
புலிப்பாய்ச்சல்
காட்டத் தயாராகிறார்!

பதவி போனதும்
பதறிப் போகிறவர்
அல்ல எம் தலைவர்...
பாங்குடன் செயல்படும்
முதன்மைத் தொண்டன்...

மக்கள் தீர்ப்பை
ஏற்பவர்...
மக்கள் பணியை
சிரமேற்பவர்....

முன்னிலும் வேகமாக
களமாடுவார்...
அன்றாடம் மக்களோடு
உரையாடுவார்...

கழகம் தன்னை
வலிமையாக்கும்....
விரைவில் வெற்றியை
உரிமையாக்கும்!



சேப்பாக்கம்
**எஸ்.எச்.ரஹ்மத்துல்லா**
சென்னை மேற்கு மாவட்டக் கழக
சிறுபான்மை நல உரிமைப் பிரிவு அமைப்பாளர்